2019 ஜூலை 3]

பால் உற்பத்தியின் அளவும் அதிகரிக்கும். எனவே, அதற்கு உதவ வேண்டும் என்ற கோரிக்கையை, இந்த வேண்டுகோளை தங்களின்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவிடைமருதூர் சட்டமன்றத் தொகுதியில் மட்டும் 13 தொடக்க பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதில் திருப்பனந்தாள் ஒன்றியத்தில் மட்டும் 5 சங்கங்கள் இயங்கி வருகின்றன. இந்த 5 சங்கங்களிலிருந்து சுமார் 291 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு, உள்ளூரில் சுமார் 36 லிட்டர் பால் விற்பனை செய்ததுபோக, 255 லிட்டர் பால் தஞ்சாவூர் மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்திற்கு அனுப்பி வைக்கப்படுகிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின்படி, உற்பத்தியாகும் பாலினை சேகரிக்கின்ற ஓர் BMC அமைக்க வேண்டுமென்று சொன்னால், அதற்குத் தேவையான உதவிகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் செய்வாரேயானால், அதிகமான பால் உற்பத்தியாளர்களை அவர் சேர்ப்பாரேயானால், அந்தப் பகுதியில் ஒரு பால் குளிரூட்டும் நிலையம் (BMC) அமைப்பதற்கான நடவடிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் அனுமதியைப் பெற்று, அமைத்துக் கொடுப்பேன் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 28, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. கீதா, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

28—

தொழிற்பேட்டை

***6214—திருமதி ம. கீதா:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2019 ஜூலை 3

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஒன்றியத்தில் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துயில் கொண்டிருக்கும் திசை நோக்கி முதற்கண் வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் நல்லாட்சி நடத்தி வருகின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், மாண்புமிகு தமிழகத்தினுடைய துணை முதல்வர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஒன்றியத்தில் தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. கீதா அவர்கள்.*

முற்பகல் 11–10

திருமதி ம. கீதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தத்துவத்தின் தமிழ் மகள் எங்கள் அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கடவூரில் 2 ஒன்றியங்கள்; குறிப்பாக 20 ஊராட்சிகளில் சுமார் 80 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர். இவர்கள் பெரும்பாலும் குறு, சிறு தொழில்களையே சார்ந்து வாழ்ந்து வருகின்றனர். இவர்களுடைய வாழ்வாதாரத்தினை மேம்படுத்திடும் வகையில், பெரிய அளவிலான தொழிற்சாலைகள் ஏதும் இப்பகுதியில் இல்லை. மேலும், இப்பகுதி மக்கள் 70 கிலோ மீட்டர் தூரம் பயணம் செய்து, கரூர் பகுதியில் உள்ள* Textile Industry*–ல் பணிபுரிந்து வருகின்றனர். இதனால் இப்பகுதி மக்கள் பெரிதும் சிரமப்பட்டு*

2019 ஜூலை 3]

வருகின்றனர். எனவே, இப்பகுதி மக்களின் வாழ்க்கைத்தரம் மேம்பட, இப்பகுதியில் தொழிற்பேட்டை ஒன்றை அமைத்துத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதியில் அமைந்துள்ள கடவூர் ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் SIDCO தொழிற்பேட்டை அமைக்க கரூர் மாவட்ட நிருவாகத்துடன் SIDCO நிருவாகத்தினால் கலந்தாலோசிக்கப்பட்டது. கடவூர் ஒன்றியத்தில் தொழிற்பேட்டை அமைக்கத் தேவையான 15 முதல் 30 ஏக்கர் வரையிலான அரசு புறம்போக்கு நிலங்கள் ஏதும் இல்லை எனவும், கிருஷ்ணராயபுரம் தொகுதிக்குட்பட்ட கிருஷ்ணராயபுரம் வட்டத்தில் SIDCO தொழிற்பேட்டை அமைக்கத் தேவையான அரசு புறம்போக்கு நிலங்கள் ஏதும் இல்லை எனவும் கரூர் மாவட்ட நிருவாகம் தெரிவித்துள்ளது. எனவே, கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஒன்றியத்தில் உகந்த நிலம் கிடைக்கப்பெறாததால், அங்கு SIDCO தொழிற்பேட்டை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. கீதா அவர்கள்.*

திருமதி ம. கீதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடவூர் ஒன்றியத்தில் அந்தப் பகுதி மக்களில் பெரும்பான்மையினர் தங்கள் வாழ்வாதாரத்திற்கு கைவினைப்பொருட்களையே நம்பியிருக்கின்றனர்.*

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்) தலைமை]

குறிப்பாக மெழுகுவர்த்தி தயாரித்தல், பாக்குத் தட்டு தயாரித்தல், நூல் தயாரித்தல், ஊதுபத்தி, சூடம் மற்றும் சாம்பிராணி தயாரித்தல் மற்றும் கைவினைப்பொருட்களான ஒயர் கூடை மற்றும் சாக்குப் பை தயாரித்தல் என தனியாக குடிசைத்

தொழில்கள் செய்து வாழ்ந்து வருகின்றனர். இவை அனைத்தும் தனித்தனிப் பிரிவாக செயல்பட்டுவரும் சூழ்நிலையில், ஒரே இடத்தில் இந்த சிறு தொழில்கள் அனைத்தையும் மேம்படச் செய்யும் வகையிலும், திறம்படச் செயல்படும் வகையிலும், கடலூர் பகுதியில் தொழிற்பேட்டை அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காலையில்தான் தரகம்பட்டி பகுதி மக்களிடம் கேட்டேன்; மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோல், தரகம்பட்டியில் இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமாக 30 ஏக்கர் அளவில் இடம் இருக்கிறது என்று கூறினார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்து, அந்தப் பகுதி மக்கள் வாழ்க்கைத்தரத்தை உயர்த்திக்கொள்வதற்கு கடவூர் ஒன்றியத்தில் தொழிற்பேட்டை அமைத்துத் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், கரூர் மாவட்டம், ஆத்தூரில் 36.29 ஏக்கர் பரப்பளவில் ஒரு தொழிற்பேட்டையும், எஸ். வெள்ளாளப்பட்டி என்ற இடத்தில் 26.63 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு தொழிற்பேட்டையும் இயங்கி வருகின்றன. மாண்புமிகு அம்மா அவர்களால் இந்தப் பேரவையில் விதி 110–ன்கீழ் அறிவிக்கப்பட்டதற்கிணங்க, கரூர் மாவட்டம், புஞ்சைகாளக்குறிச்சியில் புதிய தொழிற்பேட்டை அமைக்க 52.07 ஏக்கர் நிலம் SIDCO நிறுவனத்திற்கு உரிய மாற்றம் செய்ய, அரசால் ஆணையிடப்பட்டதைத் தொடர்ந்து, 70 மேம்படுத்தப்பட்ட தொழில்மனைகள் உருவாக்கப்பட்டு, ஒதுக்கீடு செய்யத் தயார் நிலையில் உள்ளன. இப்புதிய தொழிற்பேட்டையில் ஒருங்கிணைந்த ஆயத்த ஆடை மற்றும் ஜவுளிப் பூங்கா அமைக்கப்பட்டு வருகின்றது. மேலும், 21 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் பாதாள கழிவுநீர் வசதி, குடிநீர் வசதி, சாலை அமைத்தல் போன்ற உட்கட்டமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், குளித்தலை வட்டம், கல்லடி கிராமத்தில் புதிய SIDCO தொழிற்பேட்டை அமைக்கும்பொருட்டு, புல எண் 745 பாறை வகைபாடு கொண்ட 60.93 ஏக்கர் நிலம் கண்டறியப்பட்டது.

2019 ஜூலை 3]

மேற்கண்ட, இந்த நிலத்தில் கோயில் மற்றும் கோயிலுக்குச் செல்லும் நடைபாதை இருப்பதால், கோயில் பயன்பாட்டிற்குத் தேவைப்படும் பகுதியைத் தவிர்த்து மீதமுள்ள நிலம் அளவீடு செய்யப்பட்டு, சரியான பரப்பளவுடன், உரிய இடத்தில் தொழிற்பேட்டை அமைக்க மாவட்ட நிருவாகத்திடம் கோரப்பட்டு, பரிசீலனையில் உள்ளது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய, அவர் சார்ந்திருக்கக்கூடிய சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தரகம்பட்டியில், மாவட்ட நிருவாகத்தோடு கலந்தாலோசித்து, விதிகளுக்குட்பட்டு அந்த இடத்திலே புதிய தொழிற்பேட்டை அமைக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): *மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன் அவர்கள்.*

முற்பகல் 11–15

திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஆலங்குடி தொகுதி முழுவதுமாக, கடந்த ஆண்டுவரை, விவசாயம் நிறைந்த பகுதியாக இருந்தது. தற்போது கஜா புயலின் பாதிப்பாலும், கடும் வறட்சியினாலும் விவசாயம் முற்றிலுமாக அழிந்து போயுள்ள நிலையில், ஆலங்குடி தொகுதியில் தொழிற்சாலையும் இல்லை. 1998 ஆம் ஆண்டு, முத்தமிழ் அறிஞர் அய்யா கலைஞர் அவர்கள், ஆலங்குடி தொகுதி, குரும்பூர் பகுதியில் சர்க்கரை ஆலை ஒன்றை அமைத்துத் தந்தார்கள். அதன் அடிப்படையில், அந்தப் பகுதியிலிருக்கும் 50,000–க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு, நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு கிடைத்தது. அதுவும் இப்போது மூடப்படக்கூடிய அபாயம் ஏற்பட்டிருக்கிறது. எனவே, ஆலங்குடி தொகுதியில் இருக்கின்ற இளைஞர்கள், தொழிலாளர்கள், பெண்கள் ஆகியோருக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்துகின்ற வகையில், ஆலங்குடி தொகுதி, திருவரங்குளம் ஒன்றியத்தில், வம்பன் பகுதியில் தொழிற்பேட்டை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பகுதியில் அரசுக்குச் சொந்தமான 7,000 ஏக்கர் நிலம் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, இந்த ஆண்டே பரிசீலனை*

செய்து, வம்பன் பகுதியில் தொழிற்பேட்டை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பா. பெஞ்ஜமின்: *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆலங்குடி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், தான் சார்ந்திருக்கக்கூடிய தொகுதியில், வம்பன் பகுதியில் ஒரு புதிய தொழிற்பேட்டை அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கின்றார். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): *மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன் அவர்கள்.*

திரு. சபா. ராசேந்திரன்: *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நெய்வேலி தொகுதி, காடாம்புலியூர் ஊராட்சியில் ஒரு சிறு தொழில் வளாகம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை கடந்த 2016 ஆம் ஆண்டு முதல் வைத்து வந்ததன் அடிப்படையில், அந்தக் கோரிக்கையின் முக்கியத்துவத்தை உணர்ந்து, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் அந்தத் தொழில் வளாகம் அமைக்கப்படும் என்ற வாக்குறுதியைக் கொடுத்திருந்தார்கள். எனது நன்றியை நானும் அப்போதே தெரிவித்திருந்தேன். இருந்தாலும் அதற்குப்பிறகு, அந்த* SIDCO Industrial Estate *அமைப்பதற்கான பணிகள் மிக மந்தமாக நடைபெற்று வருகின்றன. எனவே, அந்தப் பணியை விரைந்து முடித்து, அந்த* Industrial Estate–*ஐ உடனடியாகத் துவக்குவதற்கும், அதற்கான நிதியை ஒதுக்குவதற்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா? எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சரோடு சேர்ந்து, இருவருமாக முயற்சி எடுத்து, அந்தத் தொழிற்பேட்டையை அமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வார்களா என்பதை மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

2019 ஜூலை 3]

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நெய்வேலி தொகுதி, காடாம்புலியூரில் தொழிற்பேட்டை அமைப்பதற்கு, கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், காடாம்புலியூர் கிராம புல எண் 642/3–ல் 13.95 எக்டேரில் கண்டறியப்பட்டுள்ள நிலம் கல்லாங்குத்து நிலமாக உள்ளது. தொழிற்பேட்டை அமைக்க மேற்படி நிலம் உகந்ததா என்பதைக் கண்டறிய, கடலூர் மாவட்ட நிருவாகத்துடன் இணைந்து* SIDCO *நிறுவனத்தால் புல ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில், தொழிற்பேட்டை அமைக்க வேண்டுமென்றால், அணுகுச் சாலைக்கு தனியாரிடமிருந்து நிலம் கையகப்படுத்தப்பட்டால் மட்டுமே சாத்தியமாகும் எனக் கண்டறியப்பட்டது. மேலும், கடந்த 19–3–2018 அன்று நெய்வேலி தொகுதியைச் சார்ந்த மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், இப்பொருள் குறித்து கேள்வி எழுப்பி, அதற்கு நான் பதிலளிக்கையில், "மாவட்ட நிருவாகமும்,* SIDCO *நிறுவனமும் இணைந்து ஆய்வு மேற்கொண்டு, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்" என தெரிவித்திருந்தேன். அதன் அடிப்படையில், கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அண்ணன் அவர்களின் தலைமையில் கடலூர் மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய்த் துறை அலுவலர் உள்ளிட்ட மாவட்ட நிருவாக அலுவலர்களுடன், சிட்கோ நிறுவனமும் இணைந்து 4–8–2018 அன்று கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்காணும் நிலத்தில் முந்திரி சாகுபடிக்காக, பண்ருட்டி பஞ்சாயத்து நிருவாகத்தால் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. இக்குத்தகையினை இரத்து செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும், மேற்படி அணுகு சாலையை அமைப்பதற்கு தேவைப்படும், 100 மீட்டர் தொலைவில் உள்ள நிலத்தினுடைய உரிமையாளர் கண்டறியப்பட்டுள்ளார். அவரிடமிருந்து அணுகு சாலைக்கான நிலத்தினைப் பெற்று, அங்கு தொழிற்பேட்டை அமைப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்க மாவட்ட அமைச்சரான மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அண்ணன் அவர்களும், இதுசம்பந்தமாக*

மாவட்ட நிருவாகத்திடம் இப்பணியை விரைந்து முடிக்க ஆலோசனை வழங்கியதன்பேரில், தேவையான நடவடிக்கைகளை SIDCO நிறுவனம் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது என்பதனை மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன் அவர்கள்.*

முற்பகல் 11–20

திரு. வி.ஜி. ராஜேந்திரன்: *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை வணங்குகிறேன். எங்களுடைய திருவள்ளூர் தொகுதியிலே படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்பு இல்லாமல் அவதிக்குள்ளாகக்கூடிய நிலைமையில் இன்றைக்கு இருக்கிறார்கள். திருவள்ளூர் மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டமாகும். அதிலும் குறிப்பாக, திருவள்ளூர் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாகும். அந்த மாவட்டத்தைச் சார்ந்த மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களுக்கும் அது நன்றாகத் தெரியும். ஏன், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அதே மாவட்டத்தைச் சார்ந்தவர்தான். இது என்னுடைய நீண்ட நாள் கோரிக்கை. திருவாலங்காடு ஒன்றியத்தில், அந்தப் பகுதியில் தொழிற்பேட்டை ஒன்றை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கிற திருவள்ளூர் சட்டமன்றத் தொகுதியினையொட்டி காக்களூரில் மிகப் பெரிய சிட்கோ தொழிற்பேட்டை ஒன்று இயங்கி வருகிறது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கக்கூடிய திருவள்ளூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): *மாண்புமிகு அமைச்சர், திருத்தணி தொகுதிக்கும் சேர்த்து சொல்லுங்கள்.*

2019 ஜூலை 3]

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, திருத்தணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பள்ளிப்பட்டு என்ற இடத்தில் தொழிற்பேட்டை ஒன்று ஏற்கெனவே இயங்கி வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கக்கூடிய திருவள்ளூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருவாலங்காடு பகுதியில் புதிய தொழிற்பேட்டை ஒன்றை அமைப்பதற்கு மாவட்ட நிருவாகத்துடன் கலந்தாலோசித்து, புதிய தொழிற்பேட்டை அமைப்பதற்குத் தேவையான உகந்த நிலங்கள் அங்கே கிடைக்கும்பட்சத்தில், புதிய தொழில் முனைவோர்கள் தொழில் தொடங்க முன்வரும்பட்சத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, விதிகளுக்குட்பட்டு புதிய தொழிற்பேட்டை ஒன்றை அமைப்பதற்கு பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வியும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த பதிலையும் பார்க்கின்றபோது, ஏற்கெனவே இருவரும்* pre–planned *ஆக வந்திருப்பார்கள் போலத் தெரிகிறது. (சிரிப்பு)*

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 29, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

29—

சமுதாயக் கூடம்

***13779—திரு. அ. நடராஜன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—